கடவுள் துணை.

செந்தமிழ்

தொகுதி-கஉ.] ஆனந்தவருஷ சித்திரைமீ [பகுதி-சு

Vol. XII. April—May. 1914. No. 6.

சாணக்கியநீதிவெண்பா.

(கஅசு-ஆம்பக்கத் தொடர்ச்சி.)

ஶ்லோகம்

𑌪𑍍𑌰𑌥𑌮𑍇𑌨𑌾𑌰𑍍𑌜𑌿𑌤𑌾𑌵𑌿𑌦𑍍𑌯𑌾𑌦𑍍𑌵𑌿𑌤𑍀𑌯𑍇𑌨𑌾𑌰𑍍𑌜𑌿𑌤𑌂𑌧𑌨𑌂 ।
𑌤𑍃𑌤𑍀𑌯𑍇𑌨𑌾𑌰𑍍𑌜𑌿𑌤𑌂𑌪𑍁𑌣𑍍𑌯𑌂𑌚𑌤𑍁𑌰𑍍𑌥𑍇𑌕𑌿𑌂𑌕𑌰𑌿𑌷𑍍𑌯𑌤𑌿 ॥

வெண்பா.

பாலியத்திற் கல்வி பயிலவில்லை யௌவனத்திற்
சீல முறும்பொருளுந் தேடவில்லை—சாலவதன்
பின்னறமுஞ் செய்யவில்லைப் பின்னர் நரைவருமேல்
என்னொருவன் செய்யு மியல்பு.

ஶ்லோகம்

𑌨𑌦𑍀𑌕𑍂𑌲𑍇𑌚𑌯𑍇𑌵𑍃𑌕𑍍𑌷𑌾𑌃𑌪𑌰𑌹𑌸𑍍𑌤𑌗𑌤𑌂𑌧𑌨𑌂 ।
𑌕𑌾𑌰𑍍𑌯𑌂𑌸𑍍𑌤𑍍𑌰𑍀𑌗𑍋𑌚𑌰𑌂𑌯𑌸𑍍𑌯𑌸𑌰𑍍𑌵𑌂𑌤𑌦𑍍𑌵𑌿𑌫𑌲𑌂𑌭𑌵𑍇𑌤𑍍 ॥

வெண்பா.

பேணு மறிவில்லாப் பேதை மடமாதர்
காண வெளிப்பட்ட காரியமுஞ்—சேணுழுகும்
ஆற்றங் கரைமரமு மங்கியர்பாற் செல்பொருளும்
ஏற்றுப் பயன்படுவ தில்.

---

*

𑌶𑍍𑌲𑍋𑌕𑌂

𑌕𑍁𑌦𑍇𑌶𑌮𑌾𑌸𑌾𑌦𑍍𑌯 𑌕𑍁𑌤𑍋𑌽𑌰𑍍𑌥𑌸𑌞𑍍𑌚𑌯𑌃 ।
𑌕𑍁𑌪𑍁𑌤𑍍𑌰𑌮𑌾𑌸𑌾𑌦𑍍𑌯 𑌕𑍁𑌤𑍋 𑌜𑌲𑌾𑌞𑍍𑌜𑌲𑌿𑌃
𑌕𑍁𑌗𑍇𑌹𑌿𑌨𑍀𑌂 𑌪𑍍𑌰𑌾𑌪𑍍𑌯 𑌕𑍁𑌤𑍋 𑌗𑍃𑌹𑍇 𑌸𑍁𑌖𑌮𑍍 ।
𑌕𑍁𑌶𑌿𑌷𑍍𑌯𑌮𑌧𑍍𑌯𑌾𑌪𑌯𑌤𑌃 𑌕𑍁𑌤𑍋 𑌯𑌶𑌃 ॥

வெண்பா.

தீமையுறு நாட்டினிதி தேடுதலுந் தீமையுறு
மாமகவாற் றென்புலத்தார் வான்கடனுந்—தீமையுறுஞ்
சீடனாற் கீர்த்தியுந் தீயமனை யாற்சுகமும்
கூடுவார் யாவரெனக் கூறு.

𑌶𑍍𑌲𑍋𑌕𑌂

𑌕𑍂𑌪𑍋𑌦𑌕𑌂 𑌵𑌟𑌚𑍍𑌛𑌾𑌯𑌾 𑌶𑍍𑌯𑌾𑌮𑌾 𑌸𑍍𑌤𑍍𑌰𑍀 𑌚𑍇𑌷𑍍𑌟𑌕𑌾𑌲𑌯𑌮𑍍 ।
𑌶𑍀𑌤𑌕𑌾𑌲𑍇 𑌭𑌵𑍇𑌦𑍁𑌷𑍍𑌣𑌂 𑌉𑌷𑍍𑌣𑌕𑌾𑌲𑍇 𑌚 𑌶𑍀𑌤𑌲𑌮𑍍 ॥

வெண்பா.

ஆற்றியசெங் கல்வீடு மால மரநிழலும்
ஊற்றுள்ள கூவ லுறுநீரும்—சாற்றிளமை
சாரு மடவரலுந் தண்மைதருங் கோடையினில்
மாரியினில் வெம்மைதரும் வந்து.

𑌶𑍍𑌲𑍋𑌕𑌂

𑌅𑌨𑌭𑍍𑌯𑌾𑌸𑍇 𑌵𑌿𑌷𑌂 𑌵𑌿𑌦𑍍𑌯𑌾 𑌅𑌜𑍀𑌰𑍍𑌣𑍇 𑌭𑍋𑌜𑌨𑌂 𑌵𑌿𑌷𑌮𑍍 ।
𑌵𑌿𑌷𑌂 𑌗𑍋𑌷𑍍𑌠𑍀 𑌦𑌰𑌿𑌦𑍍𑌰𑌸𑍍𑌯 𑌵𑍃𑌦𑍍𑌧𑌸𑍍𑌯 𑌤𑌰𑍁𑌣𑍀 𑌵𑌿𑌷𑌮𑍍 ॥

வெண்பா.

கற்கு முறைதவறுங் கல்வி யழியாமை
பற்று முணவு பணமில்லான்—நற்சபைபோய்த்
தானிருக்கை மூத்தோன் தருணி மணம்புணர்தல்
ஆனவையும் வெவ்விடமே யாம்.

ஶ்லோகம்

துஷ்டேஷு நிஹத: ஸ்வஸ்ரூ நாவதிதா நிஹதா: ஸ்த்ரிய: ।
குலபீஜம் ஹதம் க்ஷேத்ரம் ஹ்ருத்யதோஷா ஸுஹத: ப்ரபு: ॥

வெண்பா.

ஈனமிகும் வித்தா விரும்புவிக்கு மேவலுறு
மானவன் செய்பிழையான் மன்னவற்கும்—தானிரவிற்
சென்றவற்கும் வாய்மை திறம்பு மடவரற்கும்
ஒன்றுமே கேடென்று ரோர்ந்து.

ஶ்லோகம்

வேதவேதாங்கதத்வஜ்ஞோ ஜபஹோமபராயண: ।
ஆஶீர்வாதவசோயுக்த ஏஷ ராஜபுரோஹித: ॥

வெண்பா.

வேதமுட னங்க மிக்குணர்ந்தோ னின்மொழி
ஏதமறச் சொல்லு மியல்புடையோன்—ஓதுமறை
சேர்ந்த செபம்வேள்வி செய்வோன் புரோகிதனும்
சார்ந்தவரசர் தமக்கு.

ஶ்லோகம்

குலஶீலகுணோபேத: ஸர்வதர்மபராயண: ।
ப்ரவீண: ப்ரேஷணாத்யக்ஷோ தர்மாத்யக்ஷோ விதீயதே ॥

வெண்பா.

மேவுங் குலஞ்சீல மிக்கோன் றருமநெறி
யாவும் விரும்பு மியல்புடையோன்—ஏவிக்
கரும முடிப்போன் கலைஞன் குணவான்
தருமவதி காரியெனச் சாற்று.

ஶ்லோகம்

ஆயுர்வேதக்ருதாப்யாஸஸ்ஸர்வேஷாம் ப்ரியதர்ஶந:।
ஆர்யஶீலகுணோபேத ஏஷ வைத்ய உச்யதே॥

வெண்பா.

ஆயுர்வே தப்பயிற்சி யார்வ மிகுங்காட்சி
தர்யொக்கு மன்பு தயைமுதலாய்—மேயகுணஞ்
சாற்றொழுக்க மென்பவைகள் சார்ந்தோ னெவர்களுக்கும்
ஏற்ற வயித்தியனென் றெண்.

ஶ்லோகம்

ஸக்ருதுக்தக்ருஹீதார்தோ லகுஹஸ்தோ ஜிதாக்ஷர:।
ஸர்வஶாஸ்த்ரஸமாலோகீ ப்ரக்ருஷ்டோ நாம லேகக:॥

வெண்பா.

சொல்வ தொருமுறையிற் சோராமற் கொண்டெழுத
வல்லோன் கரவேகம் வாய்ந்துள்ளோன்—பல்பலநூல்
பார்த்தறிந்தோன் வல்விரைந்து பன்னு மெழுத்தறிவோன்
வாய்த்தவெழுத் தாளனென வை.

ஶ்லோகம்

ஸம்பூர்ணநீதிஶாஸ்த்ரஜ்ஞோ வாஹநே ப்ரஜிதஶ்ரம:।
ஶௌர்யவீர்யகுணோபேத: ஸேநாத்யக்ஷ உச்யதே॥

வெண்பா.

வீரன் பெலவான் விவேகி தருமநூற்
பாரங் கடந்தோன் பரிமுதலாம்—ஊர்திகளைத்
தானு நடாத்தித் தகைசேர் புகழ்பெற்றோன்
சேனு பதியென்று செப்பு.

ஶ்லோகம்

[illegible]
[illegible] ॥

வெண்பா.

வாக்கு வலிமிக்கோன் வல்லறிஞன் மற்றொருவர்
நோக்கம் விரைந்து நுனித்தறிவோன்—மேக்குயரும்
தீர னினைப்பாளன் செப்புமொரு தூதுவனுஞ்
சாரமிகு வேந்தர் தமக்கு.

ஶ்லோகம்

[illegible]
[illegible] ॥ [வாசகம்।]

வெண்பா.

பூணும் பெலமிகுந்தோன் புத்திரன்போற் பற்றுடையோன்
காணும் வலியமைந்த காயத்தோன்—பேணலுறும்
வாளுவநூல் கற்றோன் மதுரம் பெறச்சமைப்போன்
வாளுவனே யாவனென வை.

ஶ்லோகம்

[illegible] ।
[illegible] ॥

வெண்பா.

பெட்புற்றுக் காண்போன் பெலவா னவதானி
கட்புருவ மாதிகொண்டு காணவரும்—உட்குறிப்பை
ஆயு மறிவாள னதிவீரன் வேந்தர்மனை
வாயிலுறுங் காவலனும் வாய்ந்து.

ஶ்லோகம்

𑌯𑌸𑍍𑌯𑌨𑌾𑌸𑍍𑌤𑌿𑌸𑍍𑌵𑌯𑌂𑌪𑍍𑌰𑌜𑍍𑌞𑌾𑌶𑌾𑌸𑍍𑌤𑍍𑌰𑌂𑌤𑌸𑍍𑌯𑌕𑌰𑍋𑌤𑌿𑌕𑌿𑌮𑍍 ।
𑌲𑍋𑌚𑌨𑌾𑌭𑍍𑌯𑌾𑌂𑌵𑌿𑌹𑍀𑌨𑌸𑍍𑌯𑌦𑌰𑍍𑌪𑌣𑌃𑌕𑌿𑌂𑌕𑌰𑌿𑌷𑍍𑌯𑌤𑌿 ॥

வெண்பா.

வாய்த்துத் தனக்கியல்பாய் வந்தவறி வில்லாற்குச்
சாத்திரங்க ளென்செய்யுந் தானாகப்—பார்த்துணருங்
கண்ணில்லாப் பாவிக்குக் கண்ணாடி யென்செய்யும்
எண்ணுங்கா லெல்லா மிருட்டு.

ஶ்லோகம்

𑌕𑌿𑌂𑌕𑌰𑌿𑌷𑍍𑌯𑌨𑍍𑌤𑌿𑌵𑌕𑍍𑌤𑌾𑌰𑌃𑌶𑍍𑌰𑍋𑌤𑌾𑌯𑌤𑍍𑌰𑌨𑌵𑌿𑌦𑍍𑌯𑌤𑍇 ।
𑌨𑌗𑍍𑌨𑌕𑍍𑌷𑌪𑌣𑌕𑍇𑌦𑍇𑌶𑍇𑌰𑌜𑌕𑌃𑌕𑌿𑌂𑌕𑌰𑌿𑌷𑍍𑌯𑌤𑌿 ॥

வெண்பா.

சொல்லாற் பிரசங்கஞ் சொல்வோ னதுகேட்போர்
இல்லா வவைக்களத்தி லென்செய்யும்—சொல்லாடை
நண்ணாத் துறவோர்க ணண்ணும் பதியகத்து
வண்ணானுக் கென்ன வழக்கு.

ஶ்லோகம்

𑌜𑍀𑌰𑍍𑌣𑌮𑌨𑍍𑌨𑌂𑌪𑍍𑌰𑌶𑌂𑌸𑍀𑌯𑌾𑌤𑍍𑌭𑌾𑌰𑍍𑌯𑌾𑌂𑌚𑌗𑌤𑌯𑍌𑌵𑌨𑌾𑌮𑍍 ।
𑌰𑌣𑌾𑌤𑍍𑌪𑍍𑌰𑌤𑍍𑌯𑌾𑌗𑌤𑌂𑌶𑍂𑌰𑌂𑌸𑌸𑍍𑌯𑌂𑌚𑌗𑍃𑌹𑌮𑌾𑌗𑌤𑌮𑍍 ॥

வெண்பா.

சீரணஞ்சேர் போசனமுஞ் சென்று முதிர்வடைந்த
தாரமும் வீடுவந்த தானியமும்—போரிடைப்போய்
வெற்றி யொடுவந்த வீரனுமூர் சொல்லுநவை
பற்றப் படுவ தில்லை பார்.

இங்ஙனம்,
அ. குமாரசுவாமிப்பிள்ளை,
சுன்னாகம்.

தமிழெழுத்துக்களினது வடிவம்.

தமிழெழுத்துக்கள் ஒலியெழுத்து வரியெழுத்து என இரு வகைப்படும். ஒலிவடிவாகிய எழுத்தை வரிவடிவா லெழுதுவர்.

வட்டம் சதுரம் கோல் என்னும் மூன்றுறுப்பால் வரியெழுத்துக்கள் அமைத்தெழுதப்படும். அகரம், வட்டம் சதுரம் கோல் என்னும் மூன்றுறுப்பாலும் அமைந்தமைகாண்க. சுழித்தது வட்டம். இழுத்தது கோல். மறித்தது சதுரமாம்.

இவ்வாறமைந்த வரியெழுத்து, சாதாரணமாக வட்டெழுத்தென்றும் நெட்டெழுத்தென்றும் இருவகைப்படும்.

வட்டெழுத்து, ஓலை கிழிகல் தாமிர முதலியவற்றில் விளக்கமுற வியக்தாக்ஷரமாக வரையப்படுவது. அது நூலுக்கும், விசேஷசாசனங்களுக்கு முதவுவது.

நெட்டெழுத்து, ஓலையிலே சாதாரண வியவகாரங்களை எழுதுதற்குவழங்கும் தொடையெழுத்து.

வட்டெழுத்து, பாடசாலைச்சிறுவராலும் வாசிக்கத்தகும். நெட்டெழுத்து, பயின்றோர்க்கன்றி வாசித்தலரிது.

முதலிலேபயில்வது வட்டெழுத்து. வியவகாரதசையிற்பயில்வது நெட்டெழுத்து. அது கணக்கர், கர்ணிகர், சம்பிரதிகளாற் பெரும்பாலும் வழங்கப்படும். தற்காலம் தமிழிலேவழங்கும் அச்செழுத்தெல்லாம் வட்டெழுத்துக்களே.

அவ் வச்செழுத்துக்களை உண்டாக்கினோர் சென்னை புதுவையிலிருந்த பிரபலவித்துவான்களும் கர்ணிகர்களும் சிற்பநுட்பத்தில் வல்ல கம்மியருமேயாவர். அவரெல்லாங்கூடி அக்காலத்தில்வழங்கிய கரலிகிதவட்டெழுத்துக்களையும் சிலாசாசனம் தாமிரசாசனங்களையுங் கண்ணுற் றாராய்ந்து தெளிந்து அச்செழுத்துவடிவங்களைத் துணிந்தார்கள். அவர்களே பூர்வகாலிகிதவட்டெழுத்தையும் தாம் புதிதாக அமைத்த அச்சுவட்டெழுத்தையும் ஒப்புநோக்கி இரண்டுக்கும் இயைபுகண்டவர்கள். பூர்வகரலிகிதவட்டெழுத்தை இப்போது

காண்பது எளிதன்று; தாமிரசாசனம் சிலாசாசனங்களையும் மிகப் பழையஏடுகளையுந்தேடி அவற்றிலே காண்டல்வேண்டும். கரலிகித நெட்டெழுத்துக்காண்பது எளிது. தமிழ்நாட்டிலே சாசனமெழு துவோர் நெட்டெழுத்துள்பட இன்னுன்கைச்சாத்து என்றெழுது வது இன்னும் பயின்றுவரும்வழக்காறேயாம்.

வட்டெழுத்துக் கிரமமாக நெடுங்காலமெழுதிக் கைபழகியபின் னர்க் கரவேகம் வந்தமையும். அக்கரவேகமும் சிலகாலப்பயிற்சியில் நிலைபெறும். அப்போது கரவேகம் வட்டெழுத்துக்களைத் தொடை யெழுத்தாகவெழுதுமாறு அலைகைக்கொண்டுய்க்கும்.

அங்ஙனம் எழுதும்போது வட்டெழுத்துக்களின் வடிவத்தை வழுவவிடாது காத்தே கர மெழுதிப்போகும். கருமநெருக்கம்பற்றி அதிதுரிதமாகவெழுதுவோரே வட்டெழுத்துவடிவை வழுவவிடுத்து வரைந்துசெல்வர். அப்படி யெழுதப்படுவது எழுத்தெனப்படாது. அஃது எழுதுவோர்க்கே பின்னர்ப் புலனாகாதுபோகினும் போம். அதுநிற்க.

வட்டெழுத்துக்களுள்ளே சிலவெழுத்துக்களின் கோலுறுப்புக் களைவரையும்போது எழுத்தலகுதான் போனவழியே மீண்டு சென்றுமுடிப்பதும் மீண்டு விலங்கிச்சென்றுமுடிப்பதும் மீண்டு அழுத்திமுடிப்பதுமாகப் பலவழிப்பட்டுச் செல்லும். அலகு அகரத் தை எழுதும்போது சுழிமூலத்தேதொடங்கி யழுத்திச்சுழித்து மேற் சென்றுசுற்றி வலப்பக்கமாகவழுத்தியிறங்கி இடப்பக்கமோடி வலப்பக்கமாகமீண்டு சந்தியிட்டுச் சிறிதுசென்று திரும்பி மேற் சென்று அவ்வழியே மீண்டழுத்திக் கீழேயிறங்கி முடிக்கும். பகா அகரத்தை இடப்பக்கத்துக் கோற்காற்றலையிலேதொடங்கி அழுத்தி யிறங்கி வலப்பக்கநோக்கிச்சென்று மடங்கி மேனோக்கிச்சென்று இடக்காலுயரத்துக்குச்சமமானவுடன் மீண்டழுத்தி முடிக்கும். பகர அகரத்துவலக்காலை மேலேகொண்டுபோய் அவ்வளவில்முடிக் காது மீண் டழுத்திமுடித்த தென்னையெனில், மேலேகொண்டுபோன வளவில் முடிக்கப்பழகின், பின்னருண்டாகும் கரவேகத்தால் அலகு அளவுகடந்துவீசும். வீசுமாயின், பகரத்துவலக்கால் மேலேசென்று மகரமோவென்றுமயங்குதற்கு ஏதுவாகும். அதுவுமன்றித் தொடை

யெழுத்தாக வெழுதவருங்காலத்துப் பகரத்து வலக்காலடியிலிருந் தன்றி முடியிலிருந்தொடுத்த லமையாதென்க. அதுபற்றியே பகர வகர யகரங்களின்வலக்கால் மீண்டழுத்தி முடிக்கப்படுவனவாம். அதுபற்றியே அக்கால் மெல்லியரேகையாகாது கனத்திருப்பதாம். பத்தின்குறியாகிய யவ்வுக்கும் யகரத்துக்குமுள்ள வரிவடிவவேற் றுமையைநோக்குவார்க்கு இந்நியாயம் எளிதிற்புலனும்.

இவ்வுண்மையறியாதசிலர் பகர யகர வகரங்களின்வடிவம் பிழைத்ததென்றெண்ணித் திருத்தப்புகுவர். பகர யகர வகரங்கள் வலக்கால்மெலிந்திருத்தல்வேண்டுமென்பது அவர்கருத்து. ப ய வ க்களை பா யா வா க்களாகத் தொடுத்தெழுதுமிடத்து அவ்வலக் காலடியிலன்றி முடியிற்றெடுத்த லமையாது. முடியிற்றெடுக்கில், பி யி வி யென மயங்கவிடமுண்டாம். ஆதலால் முடியிற்றெடுக்க லாகாதென்பதை வலியுறுத்துமாறே ப ய வ க்களை யெழுதும்போது அவற்றின்வலக்காலைமுடித்து மறித்தும் அவ்வழியேயழுத்தி யிறங்கி முடித்தல்வேண்டுமென்பதுகுறித்தற்கு அவ்வலக்காலைக் கனத்த ரேகையாக்கினர். அக்குறிப்புணராது திருத்தப்புகுதல் விவேகமா காது. ஆங்கில எழுத்துக்களுள்ளே 0 வினுடையவடிவத்தைநோக் குவாராயின் அதுவும் வழுவிற்றென்பர். L உடைய வடிவைநோக் குவாராயின் அதுவும் வழுவிற்றென்பர். 6 உடையவடிவத்தை நோக்குவாராயின் அதுவும் வழுவிற்றென்பர். ஆங்கிலவெழுத்தின் பயிற்சிகொண்டு தமிழெழுத்தைப் பிழையெனமதிக்கும் நாகரிகர் ஆங்கிலவெழுத்தமைதியை முற்றநோக்காது தமிழெழுத்திற் பிழை கற்பிக்கப்புகுவது தகாது என மீட்டுங்கூறுகின்றேன். தமிழில், தொடையெழுத்துக் கரலிகிதத்தில் வழங்குகின்றதன்றி அச்சில் வழங்கவில்லை. அச்செழுத்து அமைக்கமுயல்வது அத்தியாவசியகம். அதனைத் தமிழ்ச்சங்கத்தாரே முயன்று முடித்தல்வேண்டும்.

ஆ. முத்துத்தம்பிப்பிள்ளை,
யாழ்ப்பாணம், நாவலர்கோட்டம்.

சுருதிவிசாரணை.

———:0:———

இத்தேசத்தில் வெகுகாலமாக ஸங்கீதவித்தை அப்பியஸிக்கப் பட்டுவருகிறது. அப்பியஸித்தவர்கள் பழையகாலத்தில் ஈசுவர கைங்கரியத்திற்காகவே அதை யுபயோகித்துவந்தனர். அவ்வித்தை ஜாதிமுறைமைபாராட்டாமல் எல்லோருக்கும் பொதுவாயிருக்கின்றது. ஒவ்வொருஜாதியிலும் சிற்சிலபுண்ணியாத்துமாக்களுக்கு இயற்கையாய்ச் சாரீரஸம்பத்து அமைந்திருப்பதைக்கொண்டு இவ் வுண்மையை நாம் தெரிந்துகொள்கிறோம். சில கர்னாடகஅரசர்களின் காலத்தில் ஸங்கீதவித்துவான்கள்பலர் தங்கள் வயிற்றுவளர்ப்பிற்காக அந்த உத்தமமானவித்தையையுபயோகித்துத் தாழ்த்திவிட்டமையால், தற்காலத்தில் அது மிகக்கெட்டுப்போயிருப்பதுமன்றி அப் படிச்செய்வதே ஸம்பிரதாயமுமாய்விட்டது. ஸங்கீதமென்பது தேஹாத்துமாவின் ஜீவனோபாயமென்னுமுணர்ச்சியைமுற்றுமிழந்து ஜீவாத்துமாவின் உஜ்ஜீவனோபாயமே அதுவாமென்னுமுணர்ச்சியை நாம் திரும்பக் கைக்கொண்டாலன்றி நமக்கு உண்மையான ஈசனருள் கிட்டமாட்டாது. அவ்வுணர்ச்சியை அபேக்ஷிப்பவர்களுக்காகச் சாஸ்திரத்திற்கண்ட இருபத்திரண்டு சுருதிகளைப்பற்றி இங்கு விசாரிப்போம்.

நாம் ஒருவாத்தியத்தின்தந்தியைமீட்டும்போது அத்தந்தியின் முழுப்பாகத்திலும் ஸ்தூலமான ஒருநாதம் தோன்றுவது நம்மெல்லோருக்கும் வெளிப்படையாயிருக்கிறது. அந்தநாதத்துடன் அதற்கு அத்தியந்தஸம்வாதியாய் அதாவது மிகப்பொருத்தமுள்ளதாய் ஸூக்ஷ்மமான ஒருநாதமும், அப்படியே ஸூக்ஷ்மதரமான மற்றொருநாதமும் உற்றுக்கேட்பவர்களதுசெவிக்குப் புலப்படுகின்றன. இவற்றுள் ஸூக்ஷ்மமாயிருப்பது தந்தியின் ஸரிபாதிநீளத்தில் உண்டாவதென்பதும், ஸூக்ஷ்மதரமாயிருப்பது அதன் நான்கிலொருபாக நீளத்தில் உண்டாவதென்பதும் நாமே பரீக்ஷித்து அறியக்கூடியதாகும். இம்முறையே எட்டு பதினாறு முதலியபாகங்களாய்ப் பிரிந்து வரவர ஸூக்ஷ்மஸூக்ஷ்மமான நாதங்களை அது பிறப்பிக்கிறதென்றும் சாஸ்திரஜ்ஞர்கள் கூறுகின்றனர். இப்படியே மூன்றிலொரு பாகத்தில் மேற்கூறிய ஸ்தூலநாதத்திற்குஸம்வாதியான ஒரு

ஸூக்ஷ்மநாதமும், ஆறிலொருபாகத்தில் அந்த ஸூக்ஷ்மநாதத்திற்கு அத்தியந்தஸம்வாதியான ஒருஸூக்ஷ்மதரநாதமும் பிறக்கின்றன. இந்தமாதிரியே அந்தத் தந்தியின் ஐந்திலொருபாகத்திலும் ஐந்தி லிரண்டுபாகத்திலும் அந்த ஸ்தூலநாதத்திற்குஸம்வாதியாய் முற் கூறியதல்லாத மற்றொருஸூக்ஷ்மநாதமும், பத்திலொருபாகத்தில் அதற்கு அத்தியந்தஸம்வாதியான ஸூக்ஷ்மதரநாதமும் கேட்கின் றனவென்றும் நாம் பரிசோதித்து அறியக்கூடும். முன்கூறியதற்கு உள்ளதுபோலவே இவற்றிற்கும் மேன்மேலும் ஸூக்ஷ்மஸூக்ஷ்ம மானநாதங்கள் அந்தந்தக்கிரமத்தில் உண்டாகுமென்பார்கள். என்ற லும் நமதுசெவிக்கு எளிதிற்புலப்படுபவற்றைப்பற்றிமட்டிலும் நாம் விசாரித்துவைப்பது நமதுவியவஹாரத்திற்கும் அநுஷ்டானத் திற்கும் அநுகூலமாயிருக்கும். ஆகவே நமக்கு இங்குக்கிடைத்த நாதங்களின் ஸ்வபாவத்தைப்பற்றியும் அவைகளை உற்பத்திசெய்த தந்தியினது நீளத்தின் பாகதாரதமியத்தைப்பற்றியும் நாம் விசாரணை செய்வதால் ஏதாவது உண்மைவெளிப்படுகிறதாவென்றுபார்ப்போம்.

நமது ஸங்கீதசாஸ்திரஜ்ஞர்களதுபரிபாஷையில் பூர்வமேருவிலி ருந்து உத்தரமேருவரையிலுள்ள முழுத்தந்தியில்தோன்றுகிறநாதத் திற்கு, ஆதாரஷட்ஜமென்று பெயர்வழங்குகிறது. மேலே குறித்த பாகங்களில் ஒருகத்தியின்முனையை அழுத்தி அந்தஸ்தானம்முதல் உத்தரமேருஸ்தானம்வரையிலுள்ளநீளத்தைக் கணக்கிட்டுப்பார்த் தால் $\frac{9}{10}$ பாகத்திற் சுத்தரிஷபமும், $\frac{5}{6}$ பாகத்தில் ஸாதாரணகாந்தார மும், $\frac{4}{5}$ பாகத்தில் அந்தரகாந்தாரமும், $\frac{3}{4}$ பாகத்திற் சுத்தமத்தியமமும், $\frac{2}{3}$ பாகத்திற் பஞ்சமமும், $\frac{3}{5}$ பாகத்திற் சுத்ததைவதமும், $\frac{1}{2}$ பாகத்தில் ஸ்தாயிஷட்ஜமும் கிடைக்கின்றனவென்று நமது ஸங்கீதசாஸ்திரஜ் ஞர்கள் அங்கீகரிப்பார்கள். தந்தியின் நீளம் குறையக்குறைய அதன் துடிகள் (Vibrations) அம்முறையில் வரவர அதிகப்படுமென்பது ஐரோப்பியரது சாஸ்திரஸித்தாந்தமாம். இந்தவிஷயம் 'தந்த்ரீதைர்க்ய ஹ்ரஸ்வத்வேந ஜ்யேஷ்ட த்வநிவ்யவஸ்தாநகஃ' என்ற சேஷலீலாவதிவச னத்தாலும் ஊஹிக்கப்படுகிறது. ஆகவே துடிக்கணக்கில் நமது ஆதாரஷட்ஜத்திற்குச் சுத்தரிஷபம் ஒன்பதுக்குப் பத்துமடங்கும், ஸாதாரணகாந்தாரம் ஐந்துக்கு ஆறுமடங்கும், அந்தரகாந்தாரம் நான் குக்கு ஐந்துமடங்கும், சுத்தமத்தியமம் மூன்றுக்கு நான்குமடங்கும்,

பஞ்சமம் இரண்டுக்கு மூன்றுமடங்கும், சுத்ததைவதம் மூன்றுக்கு ஐந்துமடங்கும், ஸ்தாயிஷட்ஜம் ஒன்றுக்கு இரண்டுமடங்கு மாகின்றன. நமதுவாத்தியத்தின் தந்திமுழுவதும ஒருஸெக்கென்டுக்கு 240 துடிகளுள்ளதாக வைத்துக்கொள்வோம். அப்போது ஆதாரஷட்ஜத்திற்கு 240, சுத்தரிஷபத்திற்கு $266\frac{2}{3}$, ஸாதாரணகாந்தாரத்திற்கு 288, அந்தரகாந்தாரத்திற்கு 300, மத்தியமத்திற்கு 320, பஞ்சமத்திற்கு 360, சுத்ததைவதத்திற்கு 400, ஸ்தாயிஷட்ஜத்திற்கு 480 என்று இவ்விதமாகத் துடிகள் அமைகின்றன.

இங்குச் சுத்தமத்தியமத்தைநோக்க அதற்குத் துடிக்கணக்கில் எட்டுக்கு ஒன்பதுமடங்காய்வருகின்றபஞ்சமம் சதுர்சுருதியாகின்றது. இப்படியே சுத்தரிஷபத்தைநோக்க அந்தரகாந்தாரம் சதுர்சுருதியாயிருப்பதைக் காணலாம். ஆதாரஷட்ஜத்தைநோக்க அதற்குத் துடிக்கணக்கில் ஒன்பதுக்குப் பத்துமடங்காய்வருகின்ற சுத்தரிஷபம் திரிசுருதியாகும். இப்படியே ஸாதாரணகாந்தாரத்தைநோக்கச் சுத்தமத்தியமமும், பஞ்சமத்தைநோக்கச் சுத்ததைவதமும் திரிசுருதியாகின்றன. அந்தரகாந்தாரத்தைநோக்க அதற்குத் துடிக்கணக்கிற் பதினைந்துக்குப் பதினாறுமடங்காய்வருகின்ற சுத்தமத்தியமம் துவிசுருதியாகும். ஸாதாரணகாந்தாரத்தைநோக்க அதற்குத் துடிக்கணக்கில் இருபத்துநான்குக்கு இருபத்தைந்துமடங்காய்வருகின்ற அந்தரகாந்தாரம் ஏகசுருதியாகும்.

இதுவரையில் நாம் கவனித்துப்பார்த்ததில் ஸ்வரஸம்வாதத்திற்கு அநுகூலமான ஒன்பது இடைவெளிகள்கிடைத்தன. அவையாவன:- (1) ஏகசுருதி 24:25, (2) துவிசுருதி 15:16, (3) திரிசுருதி 9:10, (4) சதுர்சுருதி 8:9, (5) ஸாதாரணகாந்தாரசுருதி 5:6, (6) அந்தரகாந்தாரசுருதி 4:5, (7) மத்தியமசுருதி 3:4, (8) பஞ்சமசுருதி 2:3, (9) ஸ்தாயிசுருதி 1:2 என்பனவாம். மேலும் இவற்றுள் ஆதாரஷட்ஜத்தைநோக்க ஸாதாரணகாந்தாரமும், சுத்தரிஷபத்தைநோக்கச் சுத்தமத்தியமமும், அந்தரகாந்தாரத்தைநோக்கப் பஞ்சமமும் ஸாதாரணகாந்தாரசுருதியிலிருக்கின்றன. ஆதாரஷட்ஜத்தைநோக்க அந்தரகாந்தாரமும், ஸாதாரணகாந்தாரத்தைநோக்கப் பஞ்சமமும், சுத்தமத்தியமத்தைநோக்கச் சுத்ததைவதமும், அந்தரகாந்தாரசுருதி

விருக்கின்றன. ஆதாரஷட்ஜத்தைநோக்கச் சுத்தமத்தியமமும், அந்தரகாந்தாரத்தைநோக்கச் சுத்ததைவதமும், பஞ்சமத்தைநோக்க ஸ்தாயிஷட்ஜமும் மத்தியமசுருதியிலிருக்கின்றன. ஆதாரஷட்ஜத்தைநோக்கப் பஞ்சமமும், சுத்தரிஷபத்தைநோக்கச் சுத்ததைவதமும், சுத்தமத்தியமத்தைநோக்க ஸ்தாயிஷட்ஜமும் பஞ்சமசுருதியிலிருக்கின்றன. மேற்கூறியவைகளையன்றித் திரிசுருதிரிஷபத்தைநோக்க அதற்குத் துடிக்கணக்கில் இருபத்தைந்துக்கு இருபத்தேழுமடங்காய் ஸாதாரணகாந்தாரம்வருவதாயிருந்தாலும் அவ்விடைவெளி ஸ்வரஸம்வாதத்திற்கு மற்றவைகளைப்போல அவ்வளவு அநுகூலமானதல்லவென்று சாஸ்திரநிபுணர்கள்கூறுவார்கள். ஆகவே அவ்விடைவெளியை இங்கு நாம் ஏற்றுக்கொள்ளவில்லை.

நமது சங்கீதசாஸ்திரக்கிரந்தங்களில் 'சதுஶ்சதுஶ்சதுஶ்சைவ ஷட்ஜமத்யமபஞ்சமா: | த்வே த்வே நிஷாதகாந்தாரௌ த்ரிஸ்த்ரீ ரிஷபதைவதௌ ||' என்ற ஒருசுலோகம் எடுத்தாளப்பட்டுவருகிறது. 'ஷட்ஜம் மத்தியமம் பஞ்சமம் என்னும் ஸ்வரங்களுக்கு நான்குநான்குசுருதிகளும், நிஷாதம் காந்தாரம் என்பவற்றிற்கு மூன்றுமூன்றுசுருதிகளும், ரிஷபம் தைவதம் என்பவற்றிற்கு இரண்டிரண்டுசுருதிகளுமுண்டு' என்பது இதன்கருத்தாகும். இதுவன்றி, 'சுத்தநிஷாதத்தைநோக்கச் சதுர்சுருதியாயிருப்பது ஷட்ஜமும், அதைநோக்கத் திரிசுருதியாயிருப்பது சுத்தரிஷபமும், அதைநோக்கத் துவிசுருதியாயிருப்பது சுத்தகாந்தாரமும், அதைநோக்கச் சதுர்சுருதியாயிருப்பது சுத்தமத்தியமமும், அதைநோக்கச் சதுர்சுருதியாயிருப்பது பஞ்சமமும், அதைநோக்கத் திரிசுருதியாயிருப்பது சுத்ததைவதமும், அதைநோக்கத் துவிசுருதியாயிருப்பது சுத்தநிஷாதமுமாகும்' என்றகருத்தும் இந்தச் சுலோகத்தில் அடங்கியிருக்கிறது. இங்குக் கண்ட சுத்தஸ்வரங்களே ஸாமகானத்திற்கு உரியனவாம். அவைகளையே ஸங்கீதசாஸ்திரத்திலும் வெகுகாலமாய் எடுத்தாண்டுவருகிறார்கள். இதனுண்மை 'ஸாமவேதாதிதம் கீதம் ஸஞ்ஜக்ராஹ பிதாமஹ:' என்னும் ஸங்கீதரத்நாகரவசனத்தால் நன்குவிளங்குகின்றது.

நமக்கு ஸ்வபாவமாய்க் கிடைத்திருக்கிற ஸ்வரங்களை உற்றுப்பார்த்தால் ஆதாரஷட்ஜத்திற்குமேல் திரிசுருதியான சுத்தரிஷபமும்,

சுத்தமத்தியமத்திற்குமேற் சதுர்சுருதியான பஞ்சமமும், பஞ்சமத்திற்குமேல் திரிசுருதியான சுத்ததைவதமும் இருப்பது ஸ்பஷ்டமாகும். சுத்தரிஷபத்திற்குமேல் துவிசுருதியான சுத்தகாந்தாரமொன்றும், சுத்ததைவதத்திற்குமேல் துவிசுருதியான சுத்தநிஷாதமொன்றும் கிடைத்தால் ஒருஸ்தாயியிலுள்ள சுத்தஸ்வரங்களேழும் கிடைத்துவிட்டனவென்றுசொல்லலாம். அதற்காக $266\frac{2}{3}$ துடிகளுள்ள சுத்தரிஷபத்திற்கு $\frac{16}{15}$ மடங்கான அதாவது $284\frac{4}{9}$ துடிகளுள்ள சுத்தகாந்தாரமும், 400 துடிகளுள்ள சுத்ததைவதத்திற்கு $\frac{16}{15}$ மடங்கான அதாவது $426\frac{2}{3}$ துடிகளுள்ள சுத்தநிஷாதமும் நாம் வேண்டக்கிடைக்கின்றன. அவற்றைநோக்க அம்முறையே சுத்தமத்தியமமும் ஸ்தாயிஷட்ஜமும் சதுர்சுருதியாயிருப்பது வெளிப்படையாம்.

ஸாதாரணகாந்தாரம் மத்தியமத்தின் முதலாவதுசுருதியிலும் அந்தரகாந்தாரம் அதன் இரண்டாவதுசுருதியிலுமிருப்பனவெனச் சாஸ்திரம் கூறுகின்றது. ஆகவே நான்காவதுசுருதியிலிருக்கின்ற சுத்தமத்தியமத்திற்கு ஏகசுருதிகுறைந்த ஒருஸ்தானம் கிடைத்தால் அதுவே மத்தியமத்தின் மூன்றாவதுசுருதியாகும். அதற்கென 320 துடிகளுள்ள மத்தியமத்திற்கு $\frac{24}{25}$ மடங்கான அதாவது $307\frac{1}{5}$ துடிகளுள்ள அதன் மூன்றாவதுசுருதி கிடைக்கின்றது. இப்படி ஒருசுருதிகுறைந்துவருவதைத்தான் ச்யுதமத்தியமகாந்தாரமென்பார்கள். காந்தாரத்தின் இரண்டாவதுசுருதியை நாம் கண்டுகொண்டதுபோல அதன் முதற்சுருதியைக் கண்டுகொள்ளக்கூடுமாவென்று பார்ப்போம். தற்காலத்தில் நமதுவியவஹாரத்திற் சதுர்சுருதிரிஷபம் என்றுசொல்லப்படுவதே அதுவாகுமென்பது பலருடைய அபிப்பிராயமாகும். அப்போது 240 துடிகளுள்ள ஆதாரஷட்ஜத்திற்கு $\frac{9}{8}$ மடங்கான அதாவது 270 துடிகளுள்ள சதுர்சுருதிரிஷபமே காந்தாரத்தின் முதற்சுருதியாகும். இதுவன்றி 280 துடிகளுள்ள வேறொருசுருதி காந்தாரத்திற்கு உண்டென்றும் சிலர் சொல்வார்கள். பைரவிமுதலிய சிலராகங்களைச் சிலர் பாடும்போது இங்குக் காந்தாரத்தைப்பிடிப்பதே இவர்களுக்கு ஆதாரம்போலும். இனி ஆதாரஷட்ஜத்திலிருந்து மேற்கூறியவிவரப்படி $\frac{25}{24}$ மடங்கான அதாவது 250 துடிகளுள்ள ஏகசுருதிரிஷபமும், $\frac{16}{15}$ மடங்கான

அதாவது 256 துடிகளுள்ள துவிசுருதிரிஷபமும் கிடைப்பதில் ஸந்தேஹமில்லை.

நமதுவீணைகளில் ஷட்ஜம்பேசுகிறதந்தியில் ஷட்ஜம்முதல் பஞ்சமம்வரைக்குமுள்ளஸ்வரங்களுக்குப் பூர்வமேருமுதல் எந்த ஸ்தானங்கள் கிடைக்கின்றனவோ அவைகளே பஞ்சமம்பேசுகிற தந்தியிற் பஞ்சமம்முதல் மேல் ஸ்தாயிரிஷபம்வரைக்குமுள்ள ஸ்வரங்களுக்கும் கிடைக்கின்றனவென்பதில் எவருக்கும் ஆக்ஷேபணையிராது. ஆகவே சுத்தமத்தியமத்திற்கும் பஞ்சமத்திற்கும் இடையிலுள்ள பஞ்சமத்தின் மூன்றுசுருதிகளை ஆதாரஷட்ஜத்திற்குமேலுள்ள மூன்றுசுருதிகளுக்கு மத்தியமசுருதியில் வைக்கவேண்டிவருகிறது. அப்போது பஞ்சமத்தின் முதற்சுருதிக்கு $250\times\frac{4}{3}=333\frac{1}{3}$ துடிகளும், இரண்டாம்சுருதிக்கு $256\times\frac{4}{3}=341\frac{1}{3}$ துடிகளும், மூன்றும்சுருதிக்கு $266\frac{2}{3}\times\frac{4}{3}=355\frac{5}{9}$ துடிகளும் கிடைக்கின்றன. அவைகளுக்கு அம்முறையே தீவ்ரமத்தியமம் தீவ்ரதரமத்தியமம் தீவ்ரதமமத்தியமம் என்னும்பெயர்களை நாம் கொடுக்கலாம். ஆதாரஷட்ஜத்திலிருந்து சுத்தமத்தியமம்வரைக்குமுள்ள பத்துச்சுருதிகளுக்கும் அம்முறையே பஞ்சமம்முதல் ஸ்தாயிஷட்ஜம்வரையிலுள்ள பத்துச்சுருதிகளும் பஞ்சமசுருதியிலிருக்கவேண்டியது அவசியமாதலால் ஏகசுருதிதைவதத்திற்கு $250\times\frac{3}{2}=375$ துடிகளும், துவிசுருதிதைவதத்திற்கு $256\times\frac{3}{2}=384$ துடிகளும், நிஷாதத்தின் முதற்சுருதியாகிய சதுர்சுருதிதைவதத்திற்கு $270\times\frac{3}{2}=405$ துடிகளும், ஷட்ஜத்தின் முதற்சுருதியாகிய கைசிகநிஷாதத்திற்கு $288\times\frac{3}{2}=432$ துடிகளும், அதன் இரண்டாவதுசுருதியாகிய காகலிநிஷாதத்திற்கு $300\times\frac{3}{2}=450$ துடிகளும், அதன் மூன்றுவதுசுருதியாகிய ச்யுதஷட்ஜநிஷாதத்திற்கு $307\frac{1}{5}\times\frac{3}{2}=460\frac{4}{5}$ துடிகளும் கிடைக்கின்றன. மேற்கூறிய 280 துடிகளுள்ளசுருதியை அபேக்ஷிப்பவர்களுக்கு $280\times\frac{3}{2}=420$ துடிகளுள்ள ஒரு நிஷாதமும் வேண்டியிருக்கிறது. இப்படி இருபத்திரண்டுசுருதிகளுள் அடங்காத வேறு ஏதேனும் நாதம்வேண்டுமானல் ஒருஸ்தாயிக்குள் 53 சுருதிஸ்தானங்களடங்கிய மாஹேசுவரவீணையென்பதொன்றில் அவற்றைக் கண்டுகொள்ளலாம். அதன்விவரம் ஸ்ரீ வாணிவிலாஸினி என்னும் பத்திரிகையிற் சுருதிநிர்ணயம் என்றதலைப்பின்கீழுள்ள எனதுவியாஸத்தால் விளக்க

மாகும். அதைச் சென்றவருஷத்திய ஆகஸ்ட்மாதத்துஸஞ்சிகையிற் காணலாம்.

நமக்குக்கிடைத்த இருபத்திரண்டுசுருதிகளுக்கும் சாஸ்திரத்திற்கண்டபெயர்களையும் அவற்றிற்குவேண்டிய தந்தியின்பாகங்களையும் அவற்றின் துடிவிவரத்தையும் கிரமமாய் எழுதி இவ்வியாஸத்தைமுடிப்போம்:—

ஸ்ரீ.	சுருதிகளின் பெயர்கள்.	தந்தியின் பாகங்கள்.	துடிகளின் விவரம்.	ஸ்வரங்களின்பெயர்கள்.
4	சந்தோவதி	1/1	240	ஆதாரஷட்ஜம்.
5	தயாவதி	24/25	250	ஏகசுருதிரிஷபம்.
6	ரஞ்சனி	15/16	256	துவிசுருதிரிஷபம்.
7	ரக்திகா	9/10	$266\frac{2}{3}$	சுத்தரிஷபம்.
8	ரௌத்ரி	8/9	270	சதுர்சுருதிரிஷபம்.
9	குரோதா	27/32	$284\frac{4}{9}$	சுத்தகாந்தாரம்.
10	வஜ்ரிகா	5/6	288	ஸாதாரணகாந்தாரம்.
11	ப்ரஸாரிணி	4/5	300	அந்தரகாந்தாரம்.
12	ப்ரீதி	27/32	$307\frac{1}{5}$	ச்யுதமத்தியமகாந்தாரம்.
13	மார்ஜனி	3/4	320	சுத்தமத்தியமம்.
14	க்ஷிதி	18/25	$333\frac{1}{3}$	தீவ்ரமத்தியமம்
15	ரக்தா	45/64	$341\frac{1}{3}$	தீவ்ரதரமத்தியமம்.
16	ஸந்தீபினி	27/40	$355\frac{5}{9}$	தீவ்ரதமமத்தியமம்.
17	ஆலாபினி	2/3	360	பஞ்சமம்.
18	மதந்தி	16/25	375	ஏகசுருதிதைவதம்.
19	ரோஹிணி	5/8	384	துவிசுருதிதைவதம்.
20	ரம்யா	3/5	400	சுத்ததைவதம்.
21	உக்ரா	16/27	405	சதுர்சுருதிதைவதம்.
22	க்ஷோபிணி	9/16	$426\frac{2}{3}$	சுத்தநிஷாதம்.
1	தீவ்ரா	5/9	432	கைசிகநிஷாதம்.
2	குமுத்வதி	8/15	450	காகலிநிஷாதம்.
3	மந்தா	25/48	$460\frac{4}{5}$	ச்யுதஷட்ஜநிஷாதம்.
4	சந்தோவதி	1/2	480	ஸ்தாயிஷட்ஜம்.

S. சுப்பிரமணியசாஸ்திரி.

யசோதரகாவிய ஆராய்ச்சி.

:o:

தொகுதி கவ பகுதி ச-ல் கசகூ-ம் பக்கந்தொடர்ச்சி.

தோழி அரசியின்மனத்தினைச் சிறைகொண்டவனதுவடிவழகு எத்தன்மைத்தோவெனச் சென்றுபார்க்குமளவில், அவனை மெய் தெரியக்கண்டு அவனது அவலக்கணங்களைக்காணப்பொறாது கண் ணடைத்து இவனைக்காணின் அரசியின்மனங் குலையுமெனநினைந்து அவனிடம் செய்தியொன்றுந்தெரிவியாது திரும்பிச்சென்றனள். சென்று, அரசியைநோக்கி, "தேவி! இனியகுரலிற்பாடி உன்னை மனந்தளரச்செய்தவன் யானைப்பாகன், அட்டபங்கனெனப்படுவான். அவனைக்கண்டு மனந்தளர்ந்து கண்புதைத்துமீண்டேன். அவன் குஷ்டரோகி. சிறுமுகமும், கூன்முதுகும், குழிந்தாழ்ந்தகண்களும், குறுங்கழுத்தும், திரங்கியவிரல்களும், நெருங்கலும் நிரலுமின்றி அகத்தனவும் புறத்தனவுமாகி நீண்ட சிலபற்களும், வெளியெழுந்த நரம்புகளும், உடம்புநிரம்பக் கண்கள்கொள்ளாப் புண்களும், பேயொத்தநடையும், நெருங்கவொண்ணுது நாற்புறத்தும்வீசும் தீய நாற்றமு முள்ளான். அவனது அவலக்கணங்களைக்காணின் நீ யென்னைமுனிவையென அஞ்சி, அவனிடத்து ஒன்றும் தெரிவியா தொழிந்தேன். அவனிடத்துச்சென்றமனத்தினைத் திருப்பி, உன் நிறையை நீ காத்துக்கொள்க" என்று, குணவதிகூறினுள். அதனைக் கேட்டு அமிருதமதி, "தோழீ! இளமைப்பருவம், சுந்தரவடிவம், மேலானகுடிப்பிறப்பு, கல்விப்பெருக்கு, அளவற்றசெல்வம் ஆகிய இவற்றினுலானபயன்யாது? என்மனம் தானுகவே அவனிடம் பெயர்ந்துசென்று அவனுக்கே உரித்தாகிவிட்டது. ஆகலின், காரணம் முடிந்தபின்னர் நீ காரணங்காண்டல் எதற்கு? எவன்கண் காமதேவன் அருள்செய்தனனே அவனே எமக்குக். காமதேவனை யொத்த அழகுடையவனுவான். ஆகவே, நீ வீணிற் காலம்போக் காதுசென்று, அவனை யெனக்குத்தருக" வென்றனள். தோழியாகிய குணவதி அதனைக்கேட்டுப் பின்னும் மனம்பொறாது, "தேவி! நீ சிதேவிக்கு ஒப்பாவாய்; நீ மனதிற்கருதியவனே கொடியநோய் கொண்டு ஆவிசெல்கின்ற இழியநாயினுக்கொப்பாவான். இவ்வாறு

தீயவழியிற்செல்லுமாறு உனக்குத் துர்ப்புத்தியோதின காமதேவனதுபொல்லாச்செய்கையை என்னென்றுகூறுவேன்'' என வாய் குளறக்கூறி நடுக்கமுற்றுநின்றனள். பிறகு குணவதி, 'இன்று தொட்டு ஆடவர்கள் பெண்பாலாரை வெறுத்துத்துறந்து நற்கதி பெறுமாறு பிரஹ்மதேவனுற்படைக்கப்பட்ட பெருமகளேயாவளிவள்' என மனதிற்கொண்டு அவ்விடம்விட்டகன்று அட்டபங்கனிருக்குமிடஞ்சென்று அரசியின்கட்டளையை நிறைவேற்றினள். அரசியாகிய அமிருதமதியும் தோழியினுல் தரப்பெற்ற சாரனேடு தனிமையான குறியிடமொன்றில் மனமகிழ்ந்துகலந்திருந்து பின்னர் முன்போலத் தானிருந்தவிடத்துவந்துசேர்ந்தனள்.

நாளடைவில் அமிருதமதிக்கு அரசனிடத்துள்ள ஆசை குறைவுபடக்கர்ணவே, அரசனும் அதன்காரண மின்னதெனக்கண்டறிய எண்ணங்கொண்டானுய், அவளிடத்துச் சிறிதும் தன்கோபத்தைக் காட்டாதிருந்தனன். ஒருநாளிரவு அயர்ந்து நித்திரைகொண்டவனே போல் உடம்பும் வாயும் சிறிதுமசையாது கண்ணடைத்துப் படுத்திருந்தான். பேதையாகிய அமிருதமதியோ அதனை மெய்யுறக்கமெனக்கொண்டுமயங்கிப் படுக்கையைவிட்டெழுந்து காமவழிப்பட்டுச் சோரபுருஷனிருக்கும் குறியிடம்நோக்கிச் செல்லுவாளாயினள். யசோதரராஜனும் துயிலொழிந்து வாளினைக்கையிலேந்தி மயிலினைத் தொடர்ந்துசெல்லும் ஆண்சிங்கமேபோன்று, அவளறியாது பின் பற்றிச்சென்று, ஆங்கு அவளதுசெய்கையையறியுமாறு ஒருபுறத்துப் பதுங்கிநின்றனன். அரசியைக்கண்டதும் கடையனுகியபாகன் முனிந்து, அவளை மயிர்பிடித்திழுத்துத்தாழ்த்தி இருகைகளாலும் ஓங்கி நையப்புடைத்து "நீ காலந்தாழ்த்துவந்ததேன்? காரணம்கூறு" என நிலத்திற்றள்ளி இருகால்களாலும் துகைத்தனன். இங்ஙனம் அமிருதமதி மிதிப்புண்டு அங்குமிங்குமிழுபட்டு விம்மிவிம்மி நினைவு தப்பி இருளினுலடர்க்கப்பட்ட இளம்பிறையேபோலத் துவண்டு கிடக்கக்கண்டஅவலன் அச்சமுற்று, அவளது உடம்பு சிறிது அசையக்காணவே, அவளதுகால்களில்வீழ்ந்துபோற்றினன். அவளும் மெல்லத் தேறிக் கண்டிறந்து, "ஐயனே! நீ கோபமொழிக. அரசனுடன் அதிகநேரம் ஏகாசனத்திலிருந்து பாவியானேன். அதனுல் இங்குவரத் தாமதமாயிற்று. வேண்டுவனயாவும் தந்தருளி வேண்

டாதனவெல்லாம்விலக்கும் நன்மனம்பொருந்திய கற்பகவிருக்ஷம் கையிற்கிடைக்கப்பெற்றால் அதனை வேண்டாமெனவெறுப்பவரு முண்டோ? நின்னையல்லாது காதற்றுணைவராபவர் எனக்கு இவ்வுல கில் எவருளர்?" எனக்கூறி அவனை மகிழ்வுறச்செய்து அவனுடன் மருவிமகிழ்ந்திருந்தனள். இவற்றையெல்லாங்கண்டு கோபாவேசங் கொண்டு, அரசன் அவர்களைத் தன்கைவாளினால் வெட்டித்தாழ்த்த நினைத்தனன். அவனதுள்ளக்கருத்துக்கிசைந்து அவனதுகைவாளும் தன்கடனைமுடிக்கச் சித்தமாயிற்று. ஆயினும், அவன்மனத்திற் கொண்டகருத்தினையும் கையிலேந்தியவாளினையும் விலக்கி, அவனுள் ளத்துத் தெளிந்ததொருநல்லுணர்வு உடனே யுதயமாயிற்று. பெண் பாலார் யாதுகுற்றஞ்செய்தாராயினும் வதையினுக்கு உரியரல்லர்; பேதையாகிய இப்பாகனோ மிகவும்புல்லியன்; பெண்ணினுக் கொப்பா வான்; பிறிதுமொன்றுண்டு. போர்க்களத்திற் பகைமன்னர்களை யடர்த்துத்தாழ்த்தும் மேம்பட்டதொழிலினைக்கொண்ட இவ்வாளினை இப்புன்சாதியர்மீதுவிடுத்தல் தகாது; எனப் பலவாறு தன்னுள்ளே நினைந்து அவ்விடம்விட்டொழிந்து, முன்போலத் தன் னமளிசேர்ந் தனன். அமிருதமதியும் அவனது பக்கத்துவந்து படுத்துறங்கினள். அரசன் அன்றிரவெல்லாம் நித்திரைகொள்ளாது பலவாறுநினைந்து ஒழிவடைந்து இவ்வுலகவின்பத்தினை முற்றும்நீத்துத் தீக்ஷை கொண்டு வனஞ்சென்று தவம்புரியவெண்ணங்கொண்டனன்.

மற்றைநாள், மன்னன் இரவிற்கண்டசங்கதியை யொருவரிடத் தும்வெளியிடாது அவைக்களஞ்சேர்ந்து, பலருஞ்சூழ ஆதனத்தில் வீற்றிருந்தனன். அரசியும் வழக்கம்போல் ஆங்குவந்து அரசனது பக்கத்திருந்தனள். அரசன், வேண்டுமென்றே அவளுடன் வேடிக் கையும் விநோதமுமாகப் பேசிக்கொண்டிருந்து, இடையிற் கையி லிருந்த கருங்குவளைமலரினால் அவள்மேல் விளையாட்டிற்காகவீசவே, அவள் அதனைத் தாங்கமாட்டாதவளேபோற் பேச்சுமூச்சில்லாது இட்டகாலு மிட்டகையுமாக நிலத்திற்சாய்ந்தனள். சந்தனநீர் தெளித்துத்தேற்றத் தேறியெழுந்தனள். அரசன் அப்பொழுது அவளைப்பார்த்து, "புரைகள்தோறும் நீர்சுரந்துபொசியும் பொந்தினை யுடைய நீலமலரினால் தாக்கப்பட்டவுனக்கு நற்காலவயத்தால் எந்தத்தெய்வம் மனமிரங்கியோ போனவுயிரும் திரும்பிவந்தது"

எனக் கபடமாகச் சிரித்துச்சொல்லி, அவ்விடம்விட்டுநீங்கிப் பெருமூச்செறிந்தனன். பிறகு தான் துறவுகொள்ளுமுன்னர்த் தன்னன்னையைக்காணவிரும்பித் தாயிடஞ்சென் றடிபணிந்தனன். தாய், "கடல்சூழ்ந்த இப்பூவுலகு அனைத்தினையும் நீ ஒருகுடைக்கீழாக்கியாளுக" என ஆசிகூறிப் பின் "என்மகனே! உடல்மெலிந்து முகநிறமாறி அழகிழந்து வாட்டமுற்றிருப்பதேன்?" எனக் கேட்க, அரசன், "அன்னாய்! ஆகாயமார்க்கத்தில்விளங்கும் சந்திரகாந்தி, கிரணங்களால்நிறைவுற்ற சந்திரனைவிட்டுநீங்கி, ஒளிமழுங்கித் தரையிற்சென்று, ஆங்குத் தன்னைமறைக்கவல்லதோர் இருட்பகுதியுடன் இரவிற் சேர்ந்திருக்கக் கனவினிற் கண்ணாரக்கண்டேன். அங்ஙனம் கண்டது என்னுடையமனத்தினை வாள்கொண்டறுக்கின்றது" என்றனன். அதனைச் செவியேற்ற சந்திரமதி "மகனே! நமது நகரதேவதையாம் சண்டிகாதேவி, எமக்குவருவதற்கிருக்கும் தீமைகளை இங்ஙனம் கனவினிற் சொல்லாமற்சொல்லி அடையாளங்காட்டினள் போலும்; இக்கனவு தீமைக்கேதுவாகுமென நீ அஞ்சவேண்டாம். பணிந்தாரை அருள்கொண்டுகாக்கும் சண்டிகாதேவியை நீ பணிந்தனையாயின், உனக்குவருவனவாகவுள்ள இடர்கள்யாவும் தாமே ஒழியும். ஐப்பசிமாதத்துப் பூர்வபக்ஷத்து அஷ்டமிகூடிய மங்களவாரத்தன்று குறுமறியொன்றை நீ உன்வெற்றிவாளினாற் கொன்று தேவிக்குக் கைப்பலிகொடுத்துப் பணிந்தனையாயின், தேவியுன்னிடத்து அருள்புரிந்து இக்கனவினால்விளையும் எல்லாத்தீமைகளையும் தீர்த்துக் காப்பாற்றுவள்" என்றனள். இவ்வாறு அவள் சொல்லக்கேட்டயசோதரன், இருகைகளாலும் செவிபுதைத்து, "அன்னாய்! இதென்ன புதுமையாயிருக்கின்றது, இன்று நீகூறியது! தன்னுயிர்நீத்தேனும் மன்னுயிர்காத்தல் மன்னன்கடனாகவிருக்க, என்னுயிர்காக்கவெண்ணி யான் பிறவுயிர்களைக்கொல்லின், எனக்கினி என்னை இவ்வுலகு காவல்? குடிகளுக்கு அரசனையன்றி இவ்வுலகத்தில் வேறுபுகலிடமுண்டோ? மேலும், என்னில் எளியாரைக்கொன்று யான் உயிர்வாழநினைத்தல், மறுமையில் என்னை யானே ஆழ்ந்தநரகக்குழியில் தாழ்த்த வழிதேடுதலாகும். அன்றியும், மறுமையையேமறந்து இவ்வுலகவின்பமேமேலெனக்கருதி வாழும் மனிதவாழ்வும் ஒருவாழ்வோ? ஏனெனில் இம்மண்ணுலக

வாழ்வு ஒருநிமிஷமேனும் நிலையில்லாது சஞ்சலமேயாகும். நிற்க, அன்னாய்! இதுகாறும் நின்குலத்திருந்தாரெவரும் உயிர்க்கொலை யென்பதனைக் காதிலும் கேட்கப்பொறாத ஜைனராவர். இன்று செய்யப்புகும் உயிர்வதையினால்வரும் பாவம், மேல் வரம்பில்லாத பேரிடர்களைக்கொணர்ந்துசேர்க்கும். ஆதலின் நீகூறியயாவும் எனதுநன்மைக்காகா" எனவே, சந்திரமதி தன்சொல்லுக்கு மகன் இசையாததுகண்டுசினந்து, "நீ தேவிக்கு உயிர்ப்பலிகொடுக்கத் துணிந்திலையாயின், மாவினாற்செய்த கோழியொன்றைக் கைப்பலி கொடுக்க" என்றனள். இவ்வாறு தாய்சொன்னதைக்கேட்டு, அரசன், நானென்றுசொல்லத் தானென்றாயிற்று. நான் என்மனை யாளின்களவொழுக்கத்தைக்கருதிக்கூறியது மாயக்கனவுரை யொன்று; என் அன்னை அதனைமனத்திற்கொண்டுகூறியது மற் றொன்று. என்செயலாகும்? வினைப்பயனைவிலக்க யாராலாகும்? தாய்சொன்மறுக்கின், தாயை அவமதித்தபழிசேரும்; அவளது சொல்லுக்கு அமைந்துநடக்கிற் கொலைப்பாவம்வந்துகூடும்; ஆ! சங்கடத்திற்பட்டேன் என்று உன்னியுன்னி மனம்பதறினன். உயிர்க்கொலையென்னும் பாவனைகொண்டு உயிர்ப்பிராணியின்வடி வினைக்கொல்லினும் அது உயிர்க்கொலையேபோலுமென்னும் அறி வுடையானாயினும், தாயின்சொல்லைத்தட்டமாட்டாது அவளதுசொல் லுக்கு உடன்பட்டனன்.

பின்னர் அரசன் மாவினாற்செய்தகோழியைக் கைக்கொண்டு, தாயுடன் சண்டிகாதேவியின்கோயிலுக்குச்சென்று, தேவியைவலம் வந்து அடிபணிந்து துதிசெய்து பூசித்து, மாக்கோழியைத் தன் வாளினால்வெட்டித் தேவிக்குப் பலிகொடுத்தனன். மிகுந்தவேலைப் பாட்டுடன்செய்யப்பட்டிருந்தமையின், அதன்வெளியழகைக்கண்டு ஆசைகொண்டு சுற்றுப்புறத்துத்தேவதையொன்று குடிபுகுந்திருந்த அக்கோழி, தலையரிபட்டதும் கூவிக்கொண்டு உடல்குலுங்கித் தரையில்வீழ்ந் திறந்தது. அதுகண்டு அரசன் திடுக்கிட்டு வாளினைத் தரையிலெறிந்து, "இதென்னவிந்தை! மாவினாற்செய்தகோழியும் உயிர்பெற்றுக்கூவுமோ? கொலைப்பாவம் இவ்வாறு கூவிப் பல வித விலங்குக்கதிகளுக்கு என்னை அழைக்கின்றதுபோலும்" என்றான். பின்னும், "அந்தோ! நான் தாய்சொற்கேட்டு அறி

விழந்து அருளொழிந்துகெட்டேன். ஐயோ! வெட்டுப்பட்டமாத்திரத்தில் இம் மாக்கோழி கூவியழுத அழுகைக்குரல் என்மனத்தை யறுக்கின்றதே. ஐயையோ! அமிருதமதியின் களவொழுக்கம் என்னைக் கொல்லும்போலும். ஆ! எனதுதீவினைகளெல்லாம் என்னைச் சூழ்ந்துநின்று தலைதூக்கவொட்டாது நரகத்தில் ஆழ்த்தும்," என மனமுளைந்து பலவாறுபுலம்பினன். இவ்விதக் கவலைகள்மேலிட்டு, அரசன் அரண்மனைக்குத் திரும்பிச்சென்று, ராஜ்யப்பொறுப்பைத் தன்மகனும் யசோமதியின்பால் ஒப்புவித்தனன்; தவஞ்செய்யக்கருதி வனஞ்செல்ல ஆயத்தமாயினன். இதனை யறிந்த வஞ்சகியாகிய அமிருதமதி, அரசனிடத்துவந்து "தாங்கள் தவவனஞ்செல்வீர்களாயின் எனக்கும் அதுவேயாகும், தாங்கள் தயவுசெய்து மகனுடன் இருந்து என்மனையில் அமுதுசெய்தபின், யாம் அரசினை மகன்பால்விடுத்துத் தவவனம்புகுவோம்" என்றனள். அவளது தீயநினைவுதெரிந்திருந்தும், கெட்டகாலத்திற்குக் கெட்டவராற்கூறப்படும் கெடுவழியும் நல்வழியாகத்தோன்றுமாதலின், அரசன் அவளதுகருத்துக்கிசைந்து தாயுடன் அவளதுமனைக் கேகினன். அமிருதமதி இவ்வாறு அவர்களை விருந்துக்கழைத்து, தேனுடன் நஞ்சுகலந்து நற்சுவைமிகும் கொழுக்கட்டைகள்செய்து, தன்கணவனுக்கும் மாமிக்கு மிட்டனள். அமிழ்தினும் இனிய அத்தின்பண்டங்களை வயிறுபுடைக்க அவரிருவரும் அருந்தி, விஷம் பரவத்தொடங்கவே துன்புற்றுத் துக்கம்மேலெழுந்து உயிரிழந்தனர். பக்கத்திலிருந்தார்பலரும் மனமுருகி உடல்பதறி யலறியழவே பாவியாகிய அமிருதமதியும் அவருடன்கலந்துகொண்டனள். "இவளது தீச்செயல்களைக்கணக்கிடல் யாருக்கு மரிதினுமரிது. பார்க்கப்பொறாத கழையனும் அட்டபங்கனைவிரும்பி, மன்மதனைப்பழிக்கு மழகினையுடையமன்னனும் தன்கணவனையும் மாய்த்தனளே! பெண்பாலாருள் இழிதகையளாகிய இப்பாவி" என்றனர் உண்மையறிந்தார் சிலர். சண்டிகாதேவியினிடத்து நன்னம்பிக்கைகொண்டு உயிர்ப்பலிகொடுத்துப் பூசிப்பவருக்கு அவ்வம்மை எல்லாத்தீமைகளையும் விலக்கி, அவரதுகோரிக்கைகளை ஈடேறச்செய்வதுகண்டும் அறிவிலியாகிய அரசன், மாக்கோழியைப் பலிகொடுத்தனன். அதனால் வந்ததீங்கு இது" என்றனர் வேறுசிலர். "அரசன் அருந்தவராகிய

முனிவர்களையாதரித்து, அவர்கூறுமாறு நல்வழியில் நடந்தன னல்லன். மதிகெட்டுத் தீயவழியிற்புகுந்து அரசியலொன்றி னிடத்தே மகிழ்ச்சிகொண்டனன். இறக்குமளவும் இளமைப்பருவ முடையபெண்பாலாரை மருவி மனமகிழ்ந்தனன். இறுதியில் இவனுக்கு நல்லமரணமுமில்லை. இவனடையப்பெறும்கதி யாதோ" என்றனர் வேறுசிலர். இங்ஙனம் பக்கத்தவரும் நகரத்தவரும் மனம் வாடிநிற்க, அமிருதமதியோ தான் மனத்திற்கருதியதை முடித்துக் கொண்டனள். மகனையழைத்து, பெரிதும் துன்புற்றவளேபோல், "மகனே, என்தலைவிதியால் நீ யுன்தந்தையை இழந்து இங்ஙனம் தனியனானாய்; நீ மனம்வருந்தாது நின்குலத்தொழிலை யநுசரிக்கக் கடவை" எனக்கூறி மகுடஞ்சூட்டினள். தான் கவலையொழிந்து மனங்கொண்டவாறு அஷ்டபங்கனுடன் இன்புற்றிருந்தனள்.

(தொடரும்.)

T. S. குப்புஸ்வாமிசாஸ்திரி.

உ

செல்வநூல்.

ECONOMY.

(கசகூ-ஆம்பக்கத் தொடர்ச்சி.)

---

54. வேலைக்குத்தக்ககூலி கொடுக்கவேண்டும். வேலைகிடைக் காமல் நல்லவேலைக்காரன் தவித்துவந்திருக்குஞ்சமயமறிந்து அவ னுக்கு இயற்கையாயுள்ளகூலியைக் குறைப்போமானால் அவன் வயிற் றுத்திரத்தால் அவ்வேலையை ஒப்புக்கொண்டபோதிலும் அவன் முன் போல உத்ஸாகமாகவும் திருப்தியாகவும் வேலைசெய்யாது கடனைக் கழிப்பான். தேகபலக்குறைவால் அவன்வேலைத்திறமையும் நாளடைவிற் குறைந்துவிடும். அதனாற் கூலிகள் வேறுதொழில்களைக் கைக்கொள்வார்கள். வரவரக் கூலிகளின்தொகையும் குறைந்து விடும்.

55. கூலிக்குத்தக்கவேலை. உயர்ந்தகூலிகொடுத்து உயர்ந்த வேலைவாங்குவதே நலம். கூலியைக்குறைத்தாற் போட்டியால் உதர நிமித்தம் வேலையை ஒப்புக்கொண்டாலும் உழைப்புக்குத்தக்ககூலி யில்லாததாற் கூலிக்குத்தக்கவேலையைச்செய்து அதிருப்தியாற் கடனைக்கழித்துவிடுவான்.

56. கூலிப்பணம். (Wages capital) ஒரு ஊரில் மாதம் 1000 ரூபாய்த் தச்சுவேலைநடப்பதாயும் 50 தச்சர்களிருப்பதாயும் வைத்துக்கொள்வோம். இந்த 1000 ரூபாய்தான் கூலிப்பணம் எனப்படும். ஒவ்வொருவனும் மாதம் 20 ரூபாய் சராசரி சம்பாதிப் பான். திருப்தியுடன் சரியானவேலையும்செய்வான். அப்படிக் கல்லாது முதலாளிகள்,500ரூபாய்மாத்திரம் தச்சுவேலையிற் செலவிட வுத்தேசித்தால், தச்சுக்காரர்களுக்குள் போட்டியேற்படும். குறைந்த சம்பளத்துக்குவருவார்கள். அதனால் முன்கூறியவாறு தச்சு வேலைக்கே பலவிதக்குறைகள் நேரிடும்.

57. தொழிற்சங்கங்கள். முன்கூறியபடி தொழிலாளிகளுக்கு ஏற்படும் கஷ்டங்களைத் தொழிற்சங்கங்கள் ஒருவாறுநீக்கு கின்றன. தொழிலாளிகள் ஒற்றுமையாயிருந்தால் அக்கூட்டத்தில் இன்னவேலைக்கு இவ்வளவுக்குக்குறைந்தகூலிக்குப் போவதில்லை யென்ற ஒப்பந்தம் ஏற்படும். அவ்வொப்பந்தத்தை மீறிநடப்பவன் ஜாதிவழக்கப்படியோ, அல்லது கூட்டுமுறைப்படியோ ஒருவித அப ராதத்துக்குள்ளாவான். சரியானபடி எல்லோரும் ஒப்பந்தப்படி நடப்பாராகில், அந்தத்தொழில்செய்யும் ஜாதிமுழுமைக்கும் க்ஷேம முண்டாவதுமன்றித் தொழிற்றிறமையும் விருத்தியடையும்.

58. தொழிற்சாதிகள். (Artisan classes) நமதுதேசத்தில் தட்டான், கன்னான், கருமான், தச்சன், கொத்தன் முதலான வெவ் வேறான பலஜாதிகள் இருக்கின்றனவல்லவா. இதிற் கொல்லன் ஜாதியிற்பிறந்தவன் கொல்வேலையைத்தான் செய்யவேண்டும். அப் படியில்லாவிட்டால் அவன் ஜாதிவழக்கமிழந்தவனாவான். ஒரு தொழிலைவிட்டு இன்னொருதொழிலுக்குமாறவுமுடியாது. இவ்வித ஜாதிவழக்கத்திற் சிலபாதகங்களிருப்பதாய்ச் சொல்லுவதுண்டு. அதாவது ஒருவனுக்கு நான்குபிள்ளைகள்பிறந்தால் நால்வரும் ஒரே

தொழிலிற் பிரியமுள்ளவர்களாயிருப்பார்களென்று எண்ண முடியாது. அவனவன்விருப்பத்துக்குத்தக்கபடி தொழில்கற்பிக்க வேண்டும். பிரியமில்லாததொழிலில் ஒருவனைப் பழக்கஆரம்பித்தால் இட்டதொழிலையும் அவன் சரியானபடி செய்யமாட்டான், இஷ்டமானதொழிலும் பழக்கமில்லாமற்போய்விடுகிறது. அதனால், அவனுக்குமாத்திரமல்ல, ஜனசமூகத்துக்கே ஒருவிதக்குறைவு ஏற்படுகிறது என்று சொல்லுகிறார்கள். அது உண்மைதான். ஆனால், ஆலோசித்துப்பார்த்தால் இவ்வித ஜாதிமுறையால் ஏற்படும் பாதகங்களைப்பார்க்கிலும் சாதகங்கள் அதிகம் என்று தெரியவரும். கம்மாளர்ஜாதியிற்பிறவாத ஒருவன் தொழிற்கல்விச்சாலை (Technical institute) சென்று தொழில்கற்க ஆரம்பிப்பதாய் வைத்துக்கொள்ளுவோம். அவனுக்கு அப்பள்ளிக்கூடத்திற்சேருவதற்குமுன் குறைந்தது 5, 6 வருஷப் படிப்பாவது இருக்கவேண்டும். இதற்குள் அவனுக்கு 14, 15 வயதாய்விடுகின்றது. பிறகு அவனுக்கு மூன்றுவருஷத் தொழிற்படிப்பாவது வேண்டும். இது தவிர, கம்மாளன்மகன், உளிபிடிக்கும் பரம்பரைக்ரமப்படியுள்ள கைலாகவம், மற்றவனுக் கிராது. சிறுவயதிலேபழகாமற் காலஞ்சென்று தொழில்பழகத்தொடங்குவதாற் கைமுற்றிப் பழகவு முடியாது. இவ்வாறு புதுத்தொழில்பழகுபவன் 17, 18 வயதில் அறிவதைவிட ஜாதித்தொழில்பயில்பவன் 10, 12வயதிற் பன்மடங்கு அறிந்துவிடுகிறான்.

59. பரதேசகமனம் (Emigration). நமதுதேசத்தில் வேலைக்குமிஞ்சியகூலியாட்களிருந்து, வேலைகிடைக்காமல் தவிக்கும்நிலைமையில், ஆப்ரிக்காமுதலான புதுக்குடியேற்றநாடுகளில், வேலைக்கு வேண்டியஆட்கள் கிடையாதிருந்தால், இருதேசத்தாரும் ஒத்துப் பேசிக்கொண்டு, இந்தியாவிலுள்ளகூலிகளை ஆப்ரிக்காவுக்கு அனுப்புவது வழக்கம். அப்பொழுது இந்தியாவில் ஜனப்பெருக்கமும் போட்டியும் குறைந்து கூலியாட்களும் சரியானநிலைமையி லிருப்பார்கள்.

ஆனால் இது ஒரு சாசுவதபரிஹாரமென்றுசொல்லத்தக்கதில்லை. தென்ஆப்ரிக்கா, கானடா, ப்ரிட்டிஷ்கொலம்பியாமுதலான நாடுகளில், இந்தியர்கள் உழைக்குங்காலம்வரை அவர்கள்சரீரத்தைச் சாறுப்பிழிந்து வேலைவாங்குவதும், உழைப்புக்காலம்முடிந்ததும்

ஊருக்குத் திருப்பியனுப்புவதும், அக்கூலிகளின்தொகை அதிகரிக்காவண்ணம் பெண்கூலிகளைத் தருவிக்காதிருப்பதும் வழக்கம். இன்னும் பலவிதமாய் நமது இந்தியர் தங்கள்பேதைமையாற் படுந்துயரம் யாவரும் அறிந்தவிஷயமே! இந்நிலைமையில் இந்தியாவில் வேலைக்குறைவென்றுசொல்லுவது அறியாமையாகும்.

60. ஜனப்பெருக்கமும் கூலியும். உலகத்தில் வேலைசெய்வோர் பலரும், வேலைவாங்குவோர் சிலருந்தான் இருப்பது இயற்கை. வேலைக்குத்தக்ககூலி, வேலைசெய்வோர்யாவருக்கும்கொடுக்கப் போதுமானமுதலும் வேலையும் இருக்கும்வரை எல்லாம் சரியாய்நடக்கும். கூலிக்கும் வேலைக்கும் மிதமிஞ்சி ஜனங்கள்பெருகிவிட்டால், பெருக்கத்தாற் போட்டியும், போட்டியாற் கூலிக்குறைவும், கூலிக்குறைவால் தொழிற்றாழ்வும் ஏற்பட்டுத் தொழிலாளிகள் கஷ்டப்படுவதுடன், நல்லவேலைசெய்வோர்கிடையாமல், முதலாளியும் கஷ்டமடைகின்றான். இதனால், தேசக்ஷேமத்துக்கே குறையேற்படுகின்றது.

61. மால்தஸ் என்பவரின்கோள்கை. சாதாரணமாய், உலகத்திலுள்ளஜீவராசிகள், அகப்படும் உணவுக்குமிஞ்சி விருத்தியடைவது இயற்கையென்று மால்தஸ் கூறுகின்றார். அவ்வாறு மிதமிஞ்சி ஜனங்கள்பெருகாமலிருப்பதற்குச் சண்டை, பஞ்சம், வியாதி என்னும் பலதடைகள் ஏற்படுகின்றன. ஜனப்பெருக்கத்தால் உணவுக்கிராக்கியும், உணவுக்கிராக்கியாற் சண்டையும், சண்டையாலும் விளைவின்மையாலும் பஞ்சமும், பஞ்சத்தால் வியாதியும், வியாதியாலும் சண்டையாலும் ஜனநாசமும் ஏற்படுகின்றன.

62. கூலியும் லாபமும். கூலி ஏறஏற லாபம் குறைந்தேவரும். தொழிலாளிகள் சமுசு(Strike) கட்டிக்கொண்டு ஒற்றுமையாய் அதிகக்கூலிகேட்பதென்று ஏற்பாடுசெய்துகொண்டுவிட்டால் முதலாளிக்குக் கிடைக்கும்லாபம் குறையும். ஒற்றுமையில்லாதவரை முதலாளி கொடுத்தகூலிதான். ஒற்றுமையுண்டானால் தொழிலாளிகள்கேட்டகூலி கொடுக்கவேண்டும். இவ்வாறு கூலியதிகரிக்கவதிகரிக்க லாபம் குறையும். கடைசியாய் லாபமேயில்லாதநிலைமை வந்துவிடும். அதுவரை பொறுத்திருந்த முதலாளி லாபமில்லாததொழிலிலிருந்து நஷ்டமேற்படாமல் தன்முதலைச் சுருக்குவான். உடனே வேலைகுறையும்.

மறுபடி கூலியும் குறையும். ஆகையாற் கூலிகுறைய லாபம் மறுபடி ஏறும். ஆகையாற் கூலியும் லாபமும் தராசுத்தட்டுக்களைப்போல ஏறுவது மிறங்குவதுமாயிருக்கும்.

63. விலைவாசியும் கூலியும். பண்டங்களின்விலைவாசிக்குத் தக்கபடி அவைகளைச்செய்பவரின்கூலியும் அமைகின்றது. அதாவது:—இந்தியாவிலிருந்து ப்ரான்ஸுக்கு ஏராளமானநிலக்கடலை தேவையென்றுவைத்துக்கொள்வோம். அந்தத் தேவைக்குத்தக்கபடி கடலையின்விலையும் உயரும். உடனே இதுவரை நெல்முதலான தானியம்பயிரிட்ட குடியானவர்கள் விலைக்கு ஆசைப்பட்டுத் தங்கள் நிலங்களில் நிலக்கடலை சாகுபடிசெய்வார்கள். உடனே நிலக்கடலை சாகுபடிசெய்யும்வேலைக்காரரின்கூலியும் அதிகரிக்கும். இதேமாதிரி எக்காரணத்தாலாவது அதன்பிரியம் குறைந்துவிட்டால் விலைகுறையும். அதனாற் சாகுபடியும் குறையும். சாகுபடி குறையவே வேலை கிடையாததனாற் கூலியும் குறையும். இது பொதுவிதி.

விசேஷவிதி (Exception). உண்டானசரக்குக்கு ராஜாங்கத்தார் வரியேற்படுத்துவதாய் வைத்துக்கொள்வோம். ஒருமணங்கு உப்புக்குச் செய்கூலி 4 அணுத்தா னுகின்றது. ஆனால் அதற்கு ராஜாங்கத்தார் ஒருரூபாய் தீர்வைவிதிக்கின்றார்கள். அப்பொழுது அதன்விலை 5 மடங்கு அல்லது $1\frac{1}{4}$-ரூபாய் ஆகின்றது. இதில் மேற்கூறியவாறு விலைக்குத்தக்ககூலியென்பது பொருந்தாது.

அத்யாயம் 12.

லாபம்.

Profits.

---

64. போட்டமுதலுக்குமேல்வரும் ஆதாயமே லாபம் எனப்படும். செல்வவிருத்திக்குக் காரணமான இடம், பொருள், ஏவல் என்பவைகளில் ஒன்றாகிய பொருள் என்பதே முதல் என முன்னமே கூறப்பட்டிருக்கிறது.

65. லாபமானது மூன்றங்கங்கள்பொருந்தினதா யிருக்கின்றது. அம் மூன்ருவன:—வட்டி, துணிவு, தொழிற்றன்மை என்பனவாம். இவைகளின் தன்மைக்குத்தக்கவாறே லாபநஷ்டங்களும் ஏற்படுகின்றன.

66. வட்டி (Interest on Capital). கடனுகக்கொண்ட தொகைக்கு அதிகமாக, வாங்கினவன் கடன்கொடுத்தவனுக்குக் கொடுக்குந்தொகையே வட்டியெனப்படும். ஒருவன்முதலை இன்னெருவன் உபயோகிக்கவேண்டுமானல் அவ்வாறு உபயோகிப்பதற்குப் பிரதிப்ரயோசனமாய்க்கொடுக்கப்படும் அதிகத்தொகைதான் வட்டியாகும்.

67. துணிவு (Risk). இந்த வட்டித்தாரணையானது துணிவுக்குத்தக்கபடி அமையும். நல்லபுள்ளிக்கும், தக்கசொத்துள்ளவனுக்கும், திரும்ப நிச்சயமாய்க்கொடுப்பவனுக்கும், கடன்கொடுக்கப் பலர் காத்திருப்பார்கள். அவன்விஷயத்தில் வட்டி குறைவாகத்தான் இருக்கும். சாதாரணமாய் நடப்புவட்டி 100-க்கு ஒன்றுவீதமானுலும், முதலுக்குமோசமில்லையென்ற எண்ணத்தால் தக்கபுள்ளிக்கு ½ வட்டிக்குக்கூடக் கொடுப்பார்கள். அப்படிக்கல்லாது விடர்கள், குடிகாரர்கள், மனேராஜ்யமான (Speculation) தொழில்களில் இறங்குபவர்கள் முதலியவர்கள் அதிகவட்டிகொடுக்கத் தயாராயிருப்பார்கள். விடனும் குடிகாரனும் 100ரூ வாங்கிக்கொண்டு 200 ரூபாய்க்கு எழுதிக்கொடுப்பார்கள். இவர்களுக்குக்கொடுப்பதுதான் துணிவு (Risk) எனப்படும். வந்தால் அதிகவட்டிவரும். போனல் முதலுக்கே மோசம்வந்துவிடும். அதனல்தான் டிரஸ்டிகள் ஆதீனத்துள்ளசொத்துக்களைச் சொற்பவட்டியானுலும், ஸர்க்கார்நோட்டு முதலான தக்கஜாமீன்களின்பேரில் டிபாஸிட்செய்யவேணுமென்று வற்புறுத்துகின்றார்கள்.

68. தொழிற்றன்மை. கைக்கொண்ட தொழின்மாதிரிக்குத் தக்கபடிக்கும் லாபநஷ்டங்கள் வித்யாஸப்படும். இறைச்சிவிற்றல் முதலான ஈனமானதொழில்செய்வோர் சிலரேயாதலால் அதில் அவர்கள்வைத்ததுதான் விலை. அதிகலாபமும் வரும். மேலும் இத்தொழிலில் துணிவும் (Risk) உண்டாதலால், லாபமும் அதிகமாய்வரும்.

20 வீசைகனமுள்ள ஆட்டை 5 ரூபாய்க்குவாங்கி யறுத்தால், வீசை யொன்றுக்குக் கிரயம் 4 அணு. ½ அணு லாபம்வைத்து ஆக 4½ அணுவுக்குத்தான்விற்ப தென்ப தில்லை. அடுத்தநாள் அழுகிப்போமாதலாலும், முனிஸிபல், சுகவிசாரணை உத்யோகஸ்தர்களின் நிர்ப்பந்தத்தாலும், அதன்விலையை, இருமடங்கு மும்மடங்குகூட்டிவிற்பான். அப்படிக்கல்லாது, ஜவுளிவியாபாரம், பாத்ரவியாபாரம்முதலானதொழில்களை அநேகர் கைக்கொள்வார்கள். அழிவு நிர்ப்பந்தம்முதலான ஸங்கடங்களில்லாததொழில்களாதலால் துணிவும் (Risk) விசேஷமாயில்லை. ஆதலால், இவைகளில் அதிகலாபம் எதிர்பார்க்கமுடியாது.

69. ராஜாங்கநிலைமையும் லாபமும். ராஜாங்கநிலைமைக்குத் தக்கவாறு லாபநஷ்டங்களும் மாறுபடுகின்றன. இங்கிலாந்து, இந்தியாபோன்ற ஸ்திரமானராஜாங்கமாயிருந்தால், எவனும் தன்முதலைப் போடவிரும்புவான். அதற்குத்தக்கபடி வட்டியும் குறையும். வட்டி குறைந்தாலும் போட்டமுதலுக்குப் பழுதில்லையென்று அவனுக்குத் தைர்யமிருக்கும். இந்தியாதேசத்திற்போடப்படும் முதலுக்கு நூற்றுக்கு 5 வட்டிவரைகிடைத்தாலும் முதலாளி திருப்தியடைகின்றான். அப்படிக்கல்லாது, பாரஸீகம்போன்ற ஸ்திரமில்லாத ராஜாங்கங்களில் முதலைப்போட எவனும் அதைர்யப்படுவான். போடுபவன் துணிந்துதான்செய்யவேண்டும். அப்படிச்செய்பவர் சிலர்தானிருப்பார்கள். அதற்குத்தக்கவாறு அவர்கள் வட்டியையும் அதிகமாக வுயர்த்துவார்கள். சிலசமயங்களில் 100-க்கு 60 அல்லது 70 வட்டிகூடக் கேட்பார்கள். எந்தநேரத்தில் முதலுக்குமோசம்வந்துவிடுமோ என்று அவர்கள் சந்தேகப்பட்டுக்கொண்டிருப்பார்கள். ஆதலால், 2, 3 வருஷத்தில் வட்டியே முதலுக்குமேல் வந்துவிட்டால், அதற்குப்பிறகுவருவதெல்லாம் லாபம். வராவிட்டால் நஷ்டமில்லையல்லவா?

70. விலையேற்றமும் லாபமும். விலையேற்றத்துக்குத்தக்கவாறு லாபமும் அதிகரிக்கவேண்டுமென்பது கட்டாயமல்ல. பருத்திவிலையதிகரித்தால், அதற்குத்தக்கபடி துணிவிலையும் அதிகரிக்கும். ஆனால், கூலியும், லாபமும் முன்புள்ளதாரணைப்படியே இருக்கும். சிலசமயங்களிற் பருத்திவிலை யதிகரித்தாலும், துணிவிலையை மாமூல்

விலைக்கு ஒட்டியேவைக்கவேண்டுமென்ற ஆசையால் முதலாளிகள் முன்னைவிடச் சொற்பலாபம்வைத்துக்கூட விற்பதுண்டு. அப்படிச் செய்யாவிட்டால், விலையேற்றத்தால், அயல்நாடுகளிலிருந்து துணிகள் இறக்குமதியாக ஆரம்பித்துவிடும். ஆகையால், இங்குள்ள வியாபாரிகளுக்கு ராப்தாக் கெட்டுப்போய் வியாபாரம் முறிந்துவிடும். ஆகையாற் கொஞ்சக்காலம் லாபத்தைக்கூடக் கவனியாமல் ராப்தாக் கெடாதிருப்பதற்காகச் சொற்பலாபம் அல்லது லாபமேயில்லாமற் கூட விற்பதுண்டு. ஆகையால் விலை யதிகரித்ததால், லாபமும் அதிகரிக்குமென்ப தவசியமில்லை:

71. தொழிற்செலவு (Cost of Labour). அதாவது, ஒரு மூட்டைபருத்தியைத் துணியாக்குவதற்கு ஸர்வடக்கம் ஆகக்கூடிய செலவு என்பதேயாம். இச் செலவு மூன்றுவகையானகாரணங்களைப் பொறுத்திருக்கின்றது. அவையாவன:—(1) வேலைத்திறம், (2) வேலைக்கூலி, (3) செய்தசரக்குகளின் விலைவாசி என்பனவாம்.

(1) வேலைத்திறம் (Efficiency of Labour). கூலியும் சரக்குப்ரியமும் மாறுதிருக்கும்நிலைமையிற் கூலியாள் கைதேர்ந்தவனாயிருப்பானாகில், ஒருமடங்குவேலைசெய்யும்நேரத்தில் $1\frac{1}{2}$ அல்லது 2 மடங்குவேலைசெய்துவிடுவான். ஆதலால், முன் ஒருமடங்குக்கு ஆகும் செலவுதான் இப்பொழுது $1\frac{1}{2}$ அல்லது 2 மடங்குக்கு ஆகின்றது. ஆதலால் தொழிற்செலவு குறைகின்றது.

(2) வேலைக்கூலி (Wages of Labour). தொழிற்றிறமையும் விலைவாசியும் அதிகரிக்காது கூலிமாத்திர மதிகரிக்குமானால், அப்பொழுது தொழிற்செலவு அதிகரிக்கின்றது.

(3) விலைவாசி. செய்யும்சரக்குகளுக்கு விலைகுறைந்துவிட்டால், சரக்குகள் அதிகமாய்ச்செய்யப்படமாட்டா. அச்சரக்கைச் செய்யும் தொழிலாளிகளுக்கு வேலைகுறையும். வேலைக்குறைவுக்குத் தக்கபடி கூலியும் குறையும். அதனால் முதலாளிக்கு அச்சரக்கைச் செய்யும் தொழிற்செலவும் குறைகின்றது.

72. கூலியதிகரிப்பது எப்பொழுதும் கூலியாட்களின் நன்மைக்கல்ல. நெசவுச்சாலையில் நெய்பவர்கள் சமுசு (Strike) கட்டிக்கொண்டு, இருமடங்குகேட்பதாய்வைத்துக்கொள்வோம். அதனால்

முதலாளிக்கு லாபம்குறையும். ஏதோ தற்காலத்துக்குக் கூலி இரட்டிப்புக்கிடைப்பதால் வேலையாட்களுக்கு லாபகரமாய்த்தோன்றும். நாளடைவில் அது கூலியாட்களுக்கே கெடுதியாய்முடியும். எப்படியெனில், சாதாரணமாய் 100-க்கு 6 லாபம் கிடைப்பதாய்வைத்துக் கொள்வோம். இந்தலாபத்துக்குக் குறையாமற் கிடைப்பதானால், இன்னும் விசேஷமுதல் நெசவுத்தொழிலிற் போடத்தோன்றும். கூலியேற்றத்தால் லாபம்குறைவதானால் முதலாளிகள் அதிகமுதலைப் போடத் துணியார்கள். போட்டமுதலையும் நாளடைவிற்சுருக்கி வேறொருதொழிலிலாவதுபோடுவார்கள். அல்லது வட்டிக்கு ப்ரியமான அயல்தேசத்துக்காவது அனுப்புவார்கள். அதனால் இத்தேசத்தில் நெசவுதொழில் விருத்தியாகாமற்போவதுமாத்திரமல்ல; இருக்கும் நெசவுச்சாலைகளும் முறிந்துபோம். அதனால் இத்தேசத்து நெசவுகாரர்கள் வேலையில்லாததாலும், வேறொரு புதிய தொழிலிற் பயிற்சியில்லாமையாலும் திண்டாடும்படி நேரிடும்.

(தொடரும்.)

ஆர். எஸ். நாராயணஸ்வாமி ஐயர், பி.ஏ., பி.எல்

உ

மதிப்புரை.

---

1. சாணக்கியநீதிவெண்பா:—இது, யாழ்ப்பாணத்துச் சுன்னாகம் ஸ்ரீமாந்-அ. குமாரசுவாமிப்புலவரவர்களால் வடமொழியிலுள்ள சாணக்கியநீதிசதகம் என்னும் நீதிநூலின் மொழிபெயர்ப்பாக யாவரு முணரும்படி செய்யப்பட்ட தெளிவான நூறுவெண்பாக்களையுடையது.

இதன்கட் பிறநீதிநூல்களில்வந்தவிஷயங்க ளிடையிடையே விரவிவரினும் அவை சிறுபாகமாயும்,வாரார்தனவே பெரும்பாகமாயுமிருத்தலால் மற்றநீதிநூல்கற்றவர்களாலும் இது விரும்பிக்கற்கத் தக்கதே. இதனையியற்றியுதவிய புலவரவர்களது லோகோபகாரசீலம் பாராட்டற்பாலது.

---

2. ஸ்ரீ ராமநாத தருமசாஸ்திரபாடம்:—(ஆத்திசூடிவிளக்கம்.) இது, இலங்கை இராஜாங்கசபைப்பிரதிநிதியாகிய ஸ்ரீமாந்-பொ. இராமநாதனவர்களால் எழுதப்பட்டது. இதில், பாலர்களுக்கு நல்லொழுக்கவுணர்வுண்டாகுமாறு தெளிவான தமிழ்நடையில் ஆத்திசூடிவாக்கியங்களை முன்வைத்து அவற்றிற்கு, இடையிடையே தமக்குத்தோற்றிய அருமையான அபிப்பிராயங்களுக்கிணங்கப் பொருளெழுதி இருபத்தெட்டுப்பாடமாக முடிக்கப்பட்டிருக்கிறது. சிறுவர்களுக்கு மிகவும் பயன்படத்தக்கது. இதன்விலை சதம்—கரு.

---

3. சைவபாலபோதம்:—இது, யாழ்ப்பாணம் ஸ்ரீமாந்-ஆ. முத்துத்தம்பிப்பிள்ளையவர்களாற் சைவசமயசம்பிரதாயத்தைத் தெரிந்தொழுகுமவர்க்கு மிகவும் பயன்படுமாறு தெளிவான தமிழ்நடையில் எழுதப்பட்டிருக்கிறது. சிலதோத்திரச்செய்யுள்களும் சேர்க்கப்பட்டிருக்கின்றன. இதனைக்கற்கும் சிறுவர்களுக்கு மனநலமும் ஆசாரசீலமும் செவ்விதின் உண்டாகுமென்பதிற் சிறிதும் ஐயமில்லை. இதன்விலை சதம்—ய.

---

4. இலங்கைப்பூமிசாத்திரம்:—(இலகுபோதம்) இதுவும், ஸ்ரீமாந்-ஆ. முத்துத்தம்பிப்பிள்ளையவர்களாற் கலாசாலைமாணவர்கள் கற்கும்படி தெளிவான தமிழ்நடையி லெழுதப்பட்டுப் படங்களும், அட்டவணைகளும், பரீக்ஷைவினாக்களு முடையதாய்ப் பதிப்பிக்கப்பட்டிருக்கிறது. இதன்விலை சதம்—25.

---

5. வேதாந்தசூளாமணிவிளக்கப்பாடம்:—இது, திண்டுக்கல் மங்குவார் பத்மநாபனவர்களால், துறைமங்கலம் சிவப்பிரகாசசுவாமிகள் அருளிய வேதாந்தசூளாமணியில் இடையிடையே வேண்டுமிடங்களிற் பொருள்விளங்காதபாடங்களை மாற்றியெழுதிப் பொருள் விளங்கும்படி பதிக்கப்பட்டதாக அதன்முகவுரையால் விளங்குகின்றது. மாற்றியெழுதிய பாடங்களைத் தடித்த எழுத்திற்பதித்துப் பழையபாடங்களைக் கீழ்க்குறிப்பிற் காட்டியிருந்தால் அவற்றின் ஏற்றத்தாழ்வுகள் நன்குபுலப்படும். இதன்விலை அணா—4.

மேற்கண்டபுத்தகங்கள்வேண்டுவோர் அவற்றின் ஆசிரியர்க்கெழுதிப் பெறலாம்.

மேற்கண்டபுத்தகங்கள் ஐந்தும் "பாண்டியன் புத்தகசாலை"க்குக் கொடுக்கப்பட்டன.

பத்திராதிபர்.